ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිசேஷமானது

අංක 2185/41 - 2020 ජූලි මස 21 වැනි අඟහරුවාදා - 2020.07.21

*2185/41 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*(முத்திரை)*

கோட்டாபய ராஜபக்ஷ

**சனாதிபதியின் பணிப்புரை**

1. வான்படையின் மார்ஷல் ரொஷான் குணதிலக அவர்கள்
2. அத்மிரால் (ஓய்வுபெற்ற) ஜயந்த பெரேரா அவர்கள்
3. ரியர் அத்மிரால் (ஓய்வுபெற்ற) ஆனந்த பீரிஸ் அவர்கள்
4. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) சுமேத பெரேரா அவர்கள்
5. வைத்தியர் பந்துல விஜேசிறிவர்த்தன அவர்கள்
6. வைத்தியர் வஜிர சேனாரத்ன அவர்கள்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் வண்ணம் 2020.04.27 ஆந் திகதிய அதிகாரப்பத்திரத்தின் வண்ணம் சனாதிபதியின் பணிப்புரையின் மூலம் தாபிக்கப்பட்ட முப்படை உறுப்பினர்களை கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தவிர்த்துக்கொள்வதற்காகச் சகல படைகளினாலும் எடுக்க வேண்டிய செயல்நெறிகளைக் கற்றாராய்ந்து அந்நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக ஆலோசனை வழங்குவதற்காக தாபிக்கப்பட்ட சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாகத் தாங்கள் நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

1A - G 32324 — 32 (2020/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தற்போது போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கிடையில் கொரோனா வைரஸ் தொற்றும் போக்கு காணப்படுகின்றமையாலும்,

இவ்வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தல் மற்றும் சமூகமயமாதலைத் தவிர்த்துக் கொள்வதற்காக மிக அவசர அத்துடன் துரித நடவடிக்கை எடுத்தல் இன்றியமையாத விடயமாக என்னால் இனங்காணப்பட்டுள்ளதாதலாலும்,

அதற்கமைய, மேற்போந்த சனாதிபதி செயலணியின் விடய எல்லையை விரிவாக்க வேண்டுமென என்னால் கருதப்படுவதாலும்,

மேற்போந்த சனாதிபதி பணிப்புரையின் மூலம் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடய எல்லைக்குள் முப்படைகளின் உறுப்பினர்களுக்கு மேலதிகமாக போதைப் பொருட்களுக்கு அடிமையாகிப் புனர்வாழ்வு அளிக்கப்படும் ஆட்களையும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையும் உள்ளடக்குகின்றேன்.

அதற்கமைய மேற்போந்த பணிப்புரையின் மூலம் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றும் போது, போதைப்பொருட்களுக்கு அடிமையாகி புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவரும் ஆட்கள் மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இத்தால் பணிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதியாகிய இன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.